விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 26 முறை 26 இதழ் 244

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-10-1985

## திங்கட்கிழமை முதல் வடபகுதி ரயில்சேவை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ரயில்சேவை மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை பதினான்காம் திகதி முதல் நடைபெறும்.

திங்கட்கிழமை, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் ரயில்கள் புறப்படும். இதற்கு முன்னர் கொழும்பிலிருந்து சரக்கு (குட்ஸ்) ரயில் வண்டி யாழ். வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வறுமை நிவாரணம்: வேலைகள் நிறுத்தம்

(கிளிநொச்சி)

வறுமை நிவாரணம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுவந்த வறுமை நிவாரணப் படிவங்கள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடனடியாக நேற்று முதல்

(4-ம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்தம்: பெரும் சாதனை!

# ராஜீவ் பெருமகிழ்ச்சி!!

(புதுடில்லி)

இலங்கையில் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும், அதனைப் பயனுள்ள வகையில் அமுல் செய்வதற்கும் இலங்கை அரசாங்கமும் தமிழர் போராளிகள் குழுக்களும் இணங்கியிருப்பது பெரும்சாதனையாகும் என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்தியப் பத்திரிகையாளர் சங்கக்கூட்டத்தில் அவர் நேற்று பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தொடர்ந்து பேசுகையில் ''இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இது முதலாவது நடவடிக்கையாகும். ஒப்பந்தம் எவ்வாறு இருந்தாலும் சண்டை நிறுத்தம் பயனுள்ள விதத்தில் அமுல் செய்யப்படாவிட்டாலும், மக்களின் நம்பிக்கை இல்லாவிட்டாலும் எதனையும் சாதிக்க முடியாது.

''இலங்கையில் சகஜ நிலையை மீண்டும் ஏற்படுத்த இது ஒரு முதல் நடவடிக்கையாகும். சண்டை நிறுத்தம் தவிர வேறு எதுவும் இலங்கையில் நல்லமுறையில் செயல்படாது'' என்றார்.

மற்றொரு கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில் 'இலங்கையில் தனிநாடு ஒன்று உருவாவதனை இந்தியா ஆதரிக்கவில்லை. தமிழீழம் என்ற பேச்சுக்கே இடமில்லை; இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எந்தத் தீர்வும் இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்டதாகவே இருக்க வேண்டும். இதற்கான தீர்வை ஏற்படுத்த இந்தியா தொடர்ந்து முயற்சி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

## போர் நிறுத்த கண்காணிப்புக் குழு இன்று மாலைக்குள் நியமனம்?

(கொழும்பு)

போர் நிறுத்த கண்காணிப்புக்கான பதினொருபேர் கொண்ட பிரமுகர்குழு இன்று மாலைக்குள் நியமிக்கப்படலாமென்று நம்பகமாக அறியப்படுகின்றது.

ஏற்கனவே அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள பெயர்களுடன் மேலும் சிலரின் பெயர்கள் தமிழ் விடுதலை அமைப்புக்களின் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்படலாமென்று கருதப்படுகின்றது. முன்னாள் நீதிபதிகள் கே. ஜெட்றிகோ, எம். அப்துல் காதர், எச் வேரகொட, எம். பெஹ்றி ஹாரிசன் ஆகியவர்களுடன் திருவாளர்கள் கொட்பிறி குணதிலக்க, என் இவானந்தன், ஜே. டபிள்யூ சுபசிங்க, கே. ஜெயபாலன், பேராசிரியர் கே. சிவத்தம்பி ஆகியவர்களின் பெயர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின், தலைவரைக் குழு உறுப்பினர்களே தெரிவு செய்வார்கள்

## பேராதனை மாணவர்கள் நாளை புறப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்களில் பேராதனைப் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை புறப்படுவார்கள். இவர்களுக்கான இந்த பஸ்சேவை நாளை மட்டுமே நடைபெறும்,

நாளைக் காலை 13-10-85 ஆறு மணியளவில் இரு பஸ்கள் பேராதனைக்குப் புறப்பட்டு அன்று மாலை ஏழு மணியளவில் பேராதனையை அடையும். (ச)

## கட்டாய இராணுவப் பயிற்சி

(சென்னை)

இலங்கையில் பதினெட்டு வயதான அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கவகைசெய்யும்மசோதா இலங்கைப்பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒருமனதாக நிறைவேறியது.

முப்படைகள், தேசிய ஆயுத மற்றும் 'ரிசேர்வ்' படைகள் போன்றவற்றில் இவர்களை தாமாகவே சேர்ப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது. (பி)

## நிருபர்கள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

''யாழ் நகரில் ஸ்ரீலங்கா பத்திரிகை 'சன்' குறூப் நிருபர்கள் 'புளட்' இயக்கத்தினரால் நேற்று முன்தினமிரவு 5 மணி நேரம் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி ஈ.பி ஆர்.எல். எவ்) வெளியிட்டுவரும்'ஈழம் செய்திப்பலகை' சுவரொட்டியில் மேற்குறிப்பிட்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நோபல் சமாதானப் பரிசு

(லண்டன்)

இந்த ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு அணு ஆயுதங்களுக்கு எதிராகப போராட்டம் நடத்தும் டாக்டர்கள் அமைப்பு ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## கப்பல் கடத்தல்காரர் அமெரிக்க போர் விமானங்கள் 'கடத்தின'!

ரோம், அக்–11.

இத்தாலிய பயணிகள் கப்பலான 'அக்கேலே எலாரோ' வைக் கடத்திய ஐந்து பாலஸ்தீன கெரில்லாக்களை சில அமெரிக்கப் போர் விமானங்கள் கடத்திச் சென்று இத்தாலியில் தரை இறக்கியுள்ளன. இச்சம்பவம் நேற்று இத்தாலியின் சிசிலித் தீவில் இடம்பெற்றது. தற்போது அந்த ஐந்து பாலஸ்தீன கப்பல் கடத்தற்காரர்களும் இத்தாலியிலுள்ள அமெரிக்கக் கடற்படைக் 'கமாண்டோக்' களின் கட்டுப்பாட்டிலுள்ளனர்.

## மின்சார ஊழியர் மீது தாக்குதல்: மின்விநியோகம் திடீர் ரத்து

(கா. யோகநாதன்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள சட்டவிரோத மின்பாவனையை துண்டித்துவிட்டு 'வயருடன்' வந்துகொண்டிருந்த மின்சார பகுதி ஊழியர் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாநகரசபை மின்சாரப் பகுதி ஊழியர் சுமார் 250 பேர் நேற்றுக்காலை முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இதனால் யாழ். நகரத்தில் நேற்று காலை முதல் மின்சாரம் செயலிழந்தது.

காயமடைந்த மின்சாரப் பகுதி ஊழியரான திரு ரி. பரமேஸ்வரன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் நல்லூர் முத்திரைச் சந்தையருகில் சட்டவிரோத மின்பாவனைகளைத் துண்டித்த பின் 4 மின்சாரப்பகுதி ஊழியர்கள் வயருடன் வந்து கொண்டிருந்த போது ட்ராக்டரில் வந்த 3 இனந்தெரியாதவர்கள், வயர் கொண்டு வந்த ஊழியர் ரி. பரமேஸ்வரனை தாக்கியதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மின்சார நிலையமும், மற்றும் யாழ் நகரிலுள்ள 32 உப மின் நிலையங்களும் மூடப்பட்டு, ஊழியர்கள் வெளிநடப்பு செய்தார்கள் இதனால் யாழ். நகரில் மின்சாரம் தடைப்பட்டது.

நேற்று பிற்பகல், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இதுபற்றி ஒரு கூட்டத்தைக் கூட்டியபோதும், சமரசத் தீர்வு ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது சமரச முயற்சி இன்று காலை மீண்டும் நடைபெறும்.

யாழ் மாநகர சபை மின் பகுதி ஊழியர்கள் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் இதற்கான உரிய நடவடிக்கைகளை பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் எடுக்கத் தவறினால் தொடர்ந்து எம்மால் வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில், நேற்றைய சம்பவத்தில் இயக்கத்தின் பெயரை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் ஒருவர் குறிப்பிட்ட இயக்கத்தினரால் இனம் காணப்பட்டு 'தண்டனை' வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 600 குடும்பங்களுக்கு ரூபா 80,000 நிவாரணம்

(கா. யோகநாதன்)

திருமலை, வவுனியா பகுதிகளிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ளவர்களில் இதுவரை சுமார் 600 குடும்பங்களுக்கு 80,000 ரூபாவை நிவாரணமாக எப். ஆர்.எஸ். எஸ் ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள எப். ஆர் எஸ் எஸ் ஸ்தாபனத் தலைவர் திரு எஸ் சோதிராசா நேற்று மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

திரு எஸ் சோதிராசா தலைமையிலான 'ரெட்பானா' திரு. எஸ். சற்குணராசா, திரு. ரி. ராஜராஜேஸ்வரன் தலைமையிலான 'போருட்', திரு. கே. சி. சபாபதி தலைமையிலான சர்வோதயம், திருமதி எஸ். கைலாசபதி தலைமையிலான குழந்தைகள் பராமரிப்பு ஒன்றியம் (ஐக்கிய ராஜ்யம்) ஆகிய நான்கு ஸ்தாபனங்கள் இணைக்கப்பட்டதே எப். ஆர். எஸ். எஸ். ஸ்தாபனமாகும்.

ஒருவருக்கு ஒருநாளைக்கு 8 ரூபா வீதம் கணக்கிட்டு, தற்போது அரசு வழங்கும் தொகை போக மிகுதிக்கு பருப்பும் ரொக்கப்பணமும் இந்த ஸ்தாபனத்தினால் வழங்கப்படுகிறது.

# அரி விளம்பரம்

## தேவை

கிரைண்டிங் மில்லில் அனுபவமுள்ள டிரைவர்கள் தேவை நேரில் வரவும். Manju Grinding Mill. Puliankoodal Junction, Kayts. 1174

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல விருந்துபசார விடுதி, மதுபானச்சாலைக்கு (Restaurant and Bar) நடத்தவல்லதுள்ள பராமரிப்பாளர் உடனடித்தேவை. உணவு, விடுதிவசதியும் உண்டு விண்ணப்பிக்கவும் 16, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 1184

Apprentices: வயிண்டிங், வயறிங் வேலைகள் பழக ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். ஓமேகா, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். "ஈழநாடு"க்கு எதிரில். 1162

மெஷின் மைண்டர்கள், கம்பவிட்டர்கள் பைண்டர்கள் உடன் தேவை. நேரில் வரவும். செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். 1172

## வகுப்புகள்

பகல்நேர வகுப்புகள் O/L A/L விஞ்ஞானம் Bio and Maths) Stenography (Short-Hand, Typing மருத்துவ தாதிப் பயிற்சி (Nurses Diploma Training Course), National Certificate in English Exam. Course: 30-10-85 முன் நேரில் விண்ணப்பிக்கவும்: அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1180

மூன்றுவருட ஆங்கில மொழி மூலம் மருத்துவ தாதிப்பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சில மாணவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படும். பலரின் வேண்டுகோளின்படி வேலை செய்பவர்களுக்காக மாலை நேர (2-00 5-00) வகுப்பு ஆரம்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நேரில் வந்து விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1179

## வைத்தியம்

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சரும வியாதிகள், தொய்வு, கண் ரோகங்கள், நரம்புத் தளர்ச்சி, மாதவிடாய்க்கால உபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமான வியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும் சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மங்களாம்பிகை D. A. M, மங்களபதி வைத்தியசாலை, (பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி), 41/5, அரசவீதி, நல்லூர். 1129

## கல்வி

உயர்கல்விப் பதிப்பக வெளியீடுகள் G C E. (O/L) பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 வருட கடந்தகால வினாக்களும் விடைகளும் 10 பாடங்களில் கிடைக்குமிடங்கள்:- ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணியம், மகமிகள், சாரதா, ரகுநாதன், பஸ்ரியன் புத்தகசாலைகள். ஒவ்வொன்றும் ரூபா 17/50 1152

## விற்பனைக்கு

சுன்னாகம் மின்சார சபையின் தென்புறமுள்ள தெரிசிட்டிக் காணியில் இணற்றுப் பங்கு, லொறிப்பாதையுள்ள தோட்டக் காணியில் மேற்குப் புறமாக அரைக் கிழக்குப் புறமாக 10 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு Dr. S. சந்திரசேகரா கோப்பாய் சந்தி கோப்பாய் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். 1169

ஆனைக்கோட்டையில் மூத்த விநாயகர் கோவிலுக்கும், ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் உள்ள நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சண்முகராஜா, "மகேஸ்வரா" ஆனைக்கோட்டை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1192

மொரிஸ்மைனர் கார் EL 5000 தொடர் நல்ல நிலைமையில் உடன் விற்பனைக்குண்டு: தொடர்பு: சுபாஸ் சந்திரன், தாமரைக்குளம், தல்லுவல் தெற்கு, கரவெட்டி. 1193

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு பக்கத்தில் வதிவுடன் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு; "Your Shop" மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். 1168

யாழ். செயலகம், பல் நிலையம், பாடசாலை, சமயவழிபாட்டிடம் போன்ற பல வசதிகளைக் கொண்ட 36/9, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள, வீடு கட்டுவதற்கேற்ற காணி உடன் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: சு. இராசா, [49] 103, கச்சேரி நல்லூர் வீதி என்னும் முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும். 1196

பத்திமா வீதி மாதகலில் (இந்திரா லவவு) 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு பள்ளிக்கூடம், கோயிலுக்கு அண்மையில் அமைந்தது தொடர்பு: எஸ். ஆர் நெல்சன், நுணசை வீதி, மாதகல். 1197

நல்ல நிலையில் பாவித்துக் கொண்டிருக்கும் 2 ஸ்ரீ 8886 1200 CC வோக்ஸ்வகன் காரும் Super Deluxe Deep Frezeer மினி தியேட்டருக்குகந்த TV Screen கண்ணாடியும் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு, ராஜா 21, வேம்படிவீதி, யாழ்ப்பாணம். 1204

Hero சயிக்கிள், றைக்கேடிங் யார்ருக்கு உகந்த Hifi செற், Micro Wave அவன் குக்கர், மிகப் பெரிய U K சூட்கேஸ், லெக்லூட் செற், கார்குக்கர் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 40. ஆடியபாதம் வீதி, சண்முகத் புடவை மாளிகை, கல்வியங்காட்டுச் சந்தை. 1203

நல்ல நிலையில் உள்ள நஷனல் டெக் N V 800 விற்பனைக்குண்டு. தொடர்பு:- P. மகாதேவன், (85) 205, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1208

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## சேவை

உலக உணவு தினம் 16 ஒக்டோபர் 1985. இத் தினத்தன்று கிளிநொச்சி குடியேற்றப்பகுதி மக்களுக்கு பனம் விதைகள் நாட்டுவதற்கு இலவசமாக வழங்க உள்ளோம். பனம் விதைகள் தேவையானோர் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மின்வெற் யாழ்ப்பாணம். 1185

## தவறிவிட்டது

அல்தாஸ் மூஹிதீன் முகமது ஜெமீன் அவர்களது 511020310 V இலக்க அடையாள அட்டை பரீசுடன் குருநகருக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். அல்லது அடையாள அட்டையையும் மற்றைய பத்திரங்களையும் கடித மூலம் அனுப்பி வைக்கவும். ஷஹிஷ்பால் ஏஜென்சீஸ் 125 கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 1206

## பயிற்சி

வார இறுதி வகுப்புகள் G S Q. (Bio) B.Sc (Bio) பாலர் பயிற்சி டிப்ளோமா (Montessori Diploma) மனையியல் டிப்ளோமா (Home Science Diploma (C. E. I, Part I and Part II (Loud.), Draughtsmanship, Quantity Surveying 30 10-85 முன் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்: அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1181

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் கல்லூரியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா எட்வின் ஆனந்தராஜனின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கும் விடயமாக.

காலஞ்சென்றவர்:

இ. இ. ஆனந்தராஜன் கைம்பெண் பதுமா, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

வழக்கு இல: தத்துவம்/3905

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுண கட்டளையாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது

1985ம் ஆண்டு ஆடி மாதம் [29ந் தி. தி.

நீதிமன்றச் சட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைந்தது:
ச. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
(955)

## முற்றிலாக் கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற நவராஜ் கந்தப்புவின் மரணசாதனமற்ற மரணச் சொத்து சம்பந்தப்பட்ட விஷயம்.

காலஞ்சென்றவர்

இல; 237/T
(மரணச்சொத்து நிருவாகம்)

அத்துடன்

சிவில் நடைமுறைக் கோவை (அதி. 101)இன் 530ஆவது இலக்கப் பிரிவின்கீழ் உள்ள விண்ணப்பம் சம்பந்தமாகச் செய்யப்படும் விண்ணப்பம்.

தரனேயடி, மருதங்கேணியைச் சேர்ந்த மேரி செல்வமணி கந்தப்பு

மனுதாரர்

இத்தால் அறிவிக்கப்படுவது என்னவெனில்மேற்பெயரிட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறிப்பிட்ட நீதிமன்றில் மேற்குறிப்பிட்ட இலக்கமிடப்பட்ட மரணசாதன வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் அதன்பிரகாரம் அவ்வழக்கில்முற்றிலாக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது;

அக்கறையுள்ள எவரேனும் அப்படிப் பிறப்பிக்கப்பட்ட முற்றிலாக்கட்டளையை ஏன் முற்றுணதாக்கக்கூடாது என்பதற்கு உரிய காரணம் ஏதும் இருப்பின் இந்த நீதிமன்றத்தின் முன்பாக 1985 கார்த்திகை 05-ந் திகதி நண்பகல் 9-30 மணிக்கு தோன்றி காரணம் காட்டும்படி இத்தால் பணிக்கப்படுகின்றனர்

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

1985 ஐப்பசி மாதம் 7-ந் திகதியாகிய இன்று.

உண்மைப்பிரதி;
K. PACKIYALINGAM,
மனுதாரின் சட்டத்தரணி.
(1198)

## இசை, நடன நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, நாடகப் போட்டிகள் இம்மாதம் 31ந் திகதியும், அடுத்த மாதம் 1ம் திகதியும், யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்;

31ந் திகதி வியாழக்கிழமை இசைநிகழ்ச்சியும், வரலாறு, சமூக, இசை நாடகங்களும், 1ம் திகதி வெள்ளிக்கிழமை நடனம்; நாட்டிய நாடகம் என்பனவும் நடத்தப்படும். ஆரம்ப, கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளுக்கிடையே இப் போட்டிகள் நடைபெறும். வட்டாரப் போட்டிகளில் பங்குபற்றி 1ம் இடத்தைப் பெற்றவர்களே இம்மாவட்டப் போட்டியில் கலந்துகொள்வார்கள். இதுசம்பந்தப்பட்ட சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது. (ஐ)

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வ. உ)

## கிளைக் குழுத் தேர்தல்

### வாக்காளர் பட்டியல்

30-9-85உடன் முடிவடைந்த காலத்துக்குரிய வாக்காளர் பட்டியல் 10-10-85 முதல் 20-10-85-ந் திகதி வரை அவ்வக் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன;

இவ்வட்டவணையில் ஏதேனும் ஒரு பெயர் காணப்படுவது பற்றிய ஆட்சேபனை அல்லது தகுதிபெற்றும் தன்பெயர் இடம்பெறுவது சம்பந்தமான மேன்முறையீடு ஏதும் இருப்பின் அதை 22-10-85-ந் திகதிக்கு முன் சங்கச் செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக எழுத்தில் தெரிவிக்கவும்.

செயலாளர்,
சங்கானை பநோ.கூ.சங்கம்,
11-10-85; (1202)

## 10-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் ம. ஜனகன்

பிறவுண் வீதியைச் சேர்ந்த மனோகரன் பாலகௌரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் ஜனகன் தனது 10-வது பிறந்தநாளை நைஜீரியாவில் குதூகலமாக இன்று கொண்டாடுகிறார், அவரை அப்பா, அம்மா, தம்பி திலீப், தங்கை நிருபா, கொழும்பு திருமறை அப்பப்பா மற்றும் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, சித்தப்பாமார், அன்ரிமார், பாட்டா, பாட்டி, சகோதரர்களாகிய நகுலினி, வேணி, சிவா. இந்த ஆயோர் பல்லாண்டுகூறிச் சகல செல்வங்களும் பெறவாழ்த்துகின்றனர். 1190



## முதலாவது பிறந்த தின வாழ்த்து

### செல்வன் லதீப்குமார்

தெல்லிப்பழை, வீமன்காமத்தைச் சேர்ந்த செல்வக்குமார் ஜெயந்தி தம்பதிகளின் அன்புப் புதல்வன் செல்வன் லதீப்குமார் இன்று [12-10 85] தனது முதலாவது பிறந்தநாளை வெகு குதூகலமாகத் தனதில்லத்தில் கொண்டாடுகிறார் இவர் வீரபத்திரப் பெருமான் திருவருளால் சகல கலைகளும் கற்று பல்லாண்டு சிறப்பாக வாழவேண்டும் என்று அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், சித்தப்பா மற்றும் அன்ரிமார் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

வீமன்காமம், தெல்லிப்பழை. (1186)

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 26 (12-10-85)
கிழமை: சனி
திதி: திரயோதசி
நக்ஷத்திரம்: பூரம்

மேடம்: இறைவழிபாடு மேலிடும். அறவழியை மனம் நாடும். வேற்றுமைகள் மறையும் முயற்சி எடுப்பின் முன்னேற்றம் காண்பீர்கள்.

இடபம்: இனசனக் கொண்டாட்டம். இல்லத்தில் இன்பப் பூங்கா. வியாபார விருத்திக்கு இடமுண்டு. இன்பகரமான நாள்.

மிதுனம்: பொதுசன மதிப்பு பெரியோர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியுமுண்டு.

கடகம்: வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் முனைவர். எதிர்பாராத விபரீதங்களும் விளையக்கூடும். கடமையிலும் கண்ணியம் தேவை.

சிங்கம்: ஏமாற்றமடையலாம். எண்ணமும் சிதறலாம். குடும்பப் பிரிவும் உண்டு. வரவிலும் மந்தநிலை காணப்படும்.

கன்னி: தக்க சமயத்தில் தெய்வத்தின் அருளும் கிட்டும். திடீர் பிரயாணமும் ஏற்படலாம். கற்றதனால் பயன் இன்று கிடைக்கும்.

துலாம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாக சிக்கலில் மாட்டிக்கொள்ளநேரிடும். உங்கள் இரகசியங்களை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

விருச்சிகம்: தாய்வழிப் பெருமையுமுண்டு. அறிஞர்கள் ஆதரவும்முண்டு. கலைச் சிறப்புமுண்டு. கடமையிலும் அதிகாரம் தென்படும்.

தனுசு: சமயோசித புத்தி மூலம் எதையும் வெற்றிகரமாகச் சாதிக்கமுடியும். நீண்டநாள் தொடர்பில் நல்லமாற்றங்கள் ஏற்படும். அதிஷ்ட தேவதையின் அணைப்பும் கிட்டும்.

மகரம்: சிறுசிபத்து ஏற்படலாம். ஆத்திரம் சிந்தனையைத் தாக்கும். ஆயுத பீடையும், எதிரிகளின் ஆதரவுமுண்டு. எவ்விடயமும் கண்காணிக்கப்படல் வேண்டும்.

கும்பம்: மனைச் சிறப்பும் உண்டு. மணவாழ்வும் உண்டு. உத்தியோகப் பிரிவும் தோன்றலாம். குடும்ப வழியாலும் குதூகலம் காணப்படும்.

மீனம்: கடமையில் நஷ்டம் பகைக்குஇடமும் தோன்றும். பதட்டமும் சேரும். வீண் விரயமும் உண்டு. பொறுமை நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## இராணுவக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களாகவும் கடமையாற்றுகின்றனர்.

இத்தாக்குதலின்போது அமெரிக்க நிபுணர்களுக்கு சேதம் எதுவும் இல்லையென்று எல்சல்வடோர் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எல்சல்வடோரில் கடந்த ஆறு வருடங்களாக உள்நாட்டுக் கலவரங்கள் நீடித்து வருகின்றன. இக்கலவரங்களில் அமெரிக்க சார்பு எல்சல்வடோர் அரசுக்கு எதிராக இடதுசாரி கெரில்லாக்கள் கிளர்ச்சி செய்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எல்சல்வடோர் ஜனாதிபதி டுவாட்டேயின் புதல்வி கூட கடத்தல்காரர்களால் கடந்த மாதம் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டுள்ளார். என்பது குறிப்பிடத் தக்கது. (லி)

# மாணவர் அவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை'' என்ற தலைப்பில் சென்ற வார இறுதியில் ''நன்மை விரும்பித் தமிழ்மக்கள்'' என்று கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள பிரசுரம் தொடர்பாக கண்டனத்தைத் தெரிவிக்கும் முகமாக பல்கலைக்கழக மாணவரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தமிழ்ப் பிரதேசங்களிலே நீண்ட நெடுங்காலமாக பெண்களுக்கெதிராக இருந்துவந்த வெறுக்கத்தக்க கருத்தோட்டங்கள் மக்கள் மத்தியில் இன்று ஓரளவு மாறிவருகின்ற நிலையிலும் தமக்கு எதிரான அடக்குமுறைக்கெதிராக தமிழ்ப் பெண்கள் போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் வெளிவந்த இப்பிரசுரத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். உரிமை கோரத் துணிவில்லாத கோழைகளால் வெளியிடப்பட்ட இப்பிரசுரத்திற்குப் பொறுப்பானவர்களை மக்கள் இனங்கண்டுகொள்ளவேண்டும் என்று கோருகின்றோம்.'' (மா)

## கொலையுண்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

இந்த கப்பல் பயணியின் கொலை குறித்து எகிப்திய அதிபர் முபாரக்கிடம் நேற்று வினவப்பட்டது. அப்போது அவர் தமக்கு இச் செயல்பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லையெனவும். இக் கொலை குறித்து எதுவும் தெரிந்திருக்குமாயின் கடத்தல்காரர்களை தமது அரசு அனுப்பிய விதத்தில் அனுப்பியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (லி)

# பத்திரிகை ஆசிரியருக்கு ரூபா 5,000 அபராதம்

(கொழும்பு)


''திவயின'' (சிங்கள) தினசரிபத்திரிகையின் ஆசிரியருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படவேண்டும் என்று பாராளுமன்றத் தெரிவுக்குழு கூறியிருப்பதாக பிரதமர் ஆர். பிரேமதாசா பாராளுமன்றக் கூட்டத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தப்பத்திரிகையின் செய்திகளும், கடிதங்களும் பாராளுமன்றச் சலுகைகளை மீறுவதாகவும், பாராளுமன்ற அங்கத்தவர்களை தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் அவமதிப்பதாகவும் உள்ளதென்று பாராளுமன்றத் தெரிவுக்குழு கண்டுள்ளதாக பிரதமர் திரு. பிரேமதாசா கூறினார். (ரா)

# 1வது ஆண்டு நினைவஞ்சலி

## சீனிவாசகம் சிவனேசசிங்கம்

தொழில்நுட்ப உதவியாளர்,
(நீர்ப்பாசனத் திணைக்களம் - பன்குளம்)



அன்னையின் மடியில்:
1941-09-03

இறைவனடியில்:
1984-09-23

திதி:
1985-10-12

பிரிவேதும் கூறுமல், ஓராண்டு காலமாய் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொள்ளும் எங்கள் அன்புச் செல்வமே, எங்கள் கண்ணீர்ப்பூக்களை உமது பாதத்தில் அஞ்சலி செலுத்தும்

ஆருயிர் மனைவி, உடன் பிறப்புகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை. (1195

உ
சிவமயம்

# 16-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும் நன்றி நவிலலும்

செல்வன்
பஞ்சாட்சரம்
ராமேஸ்வரன்



மலர்வு:
26-09-1956

உதிர்வு:
29-09-1985

திதி:
14-10-1985


அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டுவிட்ட எங்கள் அன்புச்செல்வமே! உன் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது செல்வத்தின் பிரிவு கேட்டு எமதில்லம் நாடி வந்து துயரத்திற் பங்கு கொண்டு இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

13-10-1985 ஞாயிறன்று அந்தியேஷ்டிக் கிரியையும், 14-10-1985 திங்களன்று வீட்டுக் கிருத்தியமும் நடைபெறவிருப்பதால் அனைவரையும் அதிற்பங்குகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பிரிவாற் துயருறும்
அன்புத் தாயாரும்,
அன்புச் சகோதர - சகோதரிகளும்.

122/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (1188)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மணிவாக்கு

பழையன இக்காலத்துக்குப் பொருத்தமில்லாதவை களாயிருந்தால், அவைகளை மறுக்கும் சுதந்திரப்புத்தி நமக்கு இருக்க வேண்டும்.

— இங்கர் சால்.

# நமது நோக்கு

## வாக்கு நாணயம் வெற்றிக்கு அவசியம்

மனிதன் தான் தொடர்பு கொள்ளும் மக்களுடன் விசுவாசமாக நடந்துகொண்டால் அவன் வீரனாக வெற்றி சூட்டுவது நிச்சயம்.

இரும்புத்தூண் போன்ற நாவலைப நடைசையும் தன்வலுவைப்படி பாலதார் ஒலிவர் குரோம்வெல் இங்கிலாந்தின் பரபுக்கு மாறும் ஆட்சித் தலைவனுமன் என்றார் லெசிட் மார்லி.

யுத்த நிறுத்தம் பற்றி பலதரப்பட்ட பேச்சுக்கள் இதுவரையும் சந்தேகத்தையே வளர்த்து வந்திருக்கின்றன.

திம்புவில் பேச்சு; திருகோணமலை எல்லை ஆச்சு! யார் சண்டையைத் துவக்கினாலும் திருகோணமலையில், வவுனியாவில், மன்னாரில், மட்டக்களப்பில் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டவர்கள் போராளிகள் அல்ல, அப்பாவித் தமிழ் மக்கள்.

போராளிகளாயிருந்தால் போர் நிறுத்தம் தானாகவே வரும். இலங்கை இன்னுர் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டவர் எல்லோரும் கட்டாய ராணுவ சேவையில் ஈடுபடுத்தும் திட்டம் அரசாங்கத்திற்கு அவசிய தேவை.

தமிழ்ப் போராளிகளின் வெற்றிச் சாதனையில் ஒரு யுத்தநிறுத்தம் ஏற்பட்டால் இலங்கை அரசு தெற்கில் தலைகாட்டமாட்டாது.

எவ்வாறாயினும் பொது மக்கள் சார்பில் கருத்துரைக்கும் நாம் ஒரு உண்மையான போர் நிறுத்தத்தை அவசரமான தேவையாகக் கொண்டிருக்கிறோம்.

இதற்கு அரசாங்கமும் தமிழ்ப் போராளிகளும் ஒற்றுமைப்படக்கூடிய திட்டம் தயாரிப்பதில் இந்தியா காட்டும் அக்கறை தன்னமற்றது.

இதற்கமைய விட்டுக் கொடுக்கும் மன விசாலம் இருவருக்கும் தவிர்க்க முடியாத கடமை.

அடிபெடுக்கிலும் போர் தொடராது நிறுத்தப்பட வேண்டும்; இதனை மந்திரமாகக் கொண்டால், பிச்சுப் பிடுங்கும் பல பெரிய, சிறிய பிரச்சினைகள் இந்தியாவின் மத்தியஸ்தத்தில் விடிவு காணுமென நம்பலாம்.

தமிழ்ப் போராளிகள் அரசாங்கத்தின் வாக்குறுதிகளில் அவநம்பிக்கை கொள்வதற்கு போதிய நியாயம் உண்டு. "பண்டாரநாயக்காவிலே இந்த நாட்டின் நல் வாழ்வுக்கு பகைவராய் வந்தவர்கள்" என்ற பழம் பாடம் யுத்த நிறுத்தத்துக்கு பல மளிக்காது.

அதேசமயம் நாங்கள் பட்ட நட்டங்களை நினைவுகூரும் போதெல்லாம் இலங்கை ராணுவத்தை எக்கட்டத்திலும் தமிழ் மக்கள் வதியும் இடங்களிலிருந்து அகற்றவேண்டுமென்ற ஆத்திர உணர்வை தற்காலிகமாவாவது தமிழ்ப் போராளிகள் கைவிட வேண்டும்.

இதற்கு தன்மை தாங்கும் இந்தியாவின் ரொமேஷ் பாரபட்சமற்ற முறையில் இதனை நிறைநாட்ட தம்மாலியன்ற அரச தந்திரத்தையும் மனிதாபிமான ஆளுமையையும் பயன்படுத்துவது பகிரங்கம்.

தமிழ்ப் போராளிகளின் நீண்ட முறைப்பாடுகள் அனைத்தும் அறிந்திருக்கும் திரு. பண்டாரி, அவற்றை நிவர்த்தி செய்ய இலங்கை அரசை எவ்வாறு அணுக வேண்டுமென்பதை நன்கறிவார்.

பார்த்தசாரதி வேண்டாம்! பண்டாரியே வேண்டுமென்ற இலங்கை அரசுக்கும் செவிசாய்த்த இந்தியப் பிரதமர், சந்திரசேகரன், பாலசிங்கம் என்ற இரு தலைவர்களைத் திருப்பிக் கூப்பிட வேண்டுமென்ற கோரிக்கைக்கும் மதிப்பளித்திருக்கிறார்.

இன்று தேவைப்படுவது எவ்வகையிலும் விலக்கமுடியாத பரஸ்பர நம்பிக்கை. ஆயுதங்களைக் கறள் பிடிக்காதவைத்தபோதும், ராணுவம் முகாம்களில் ஓய்வெடுத்தபோதும், இவற்றிற்கு இனிமேல் தேவை வராதென்ற நம்பிக்கையில் இறுதிப் பேச்சுக்கள் நடைபெறவேண்டும்.

பௌத்த சமயத்தையும் சிங்கள மொழியையும் எவ்வகையிலும் அழிக்கமாட்டோர்கள் தமிழ்ப் போராளிகள் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி மகா சங்கத்தினருக்கு அளித்திருக்கிறார்.

மகா சங்கத்தினருக்குத் தமிழரில் இயல்பாக உள்ள அவநம்பிக்கை இந்த கோசு ஒழிய முடியுமானால் ஜனாதிபதிக்கு ஒரு பெரும் தலையிடி நீங்கும்.

இவ்வித பரஸ்பரம் அரும்பி வளர தமிழ் இயக்கங்கள் தடையில்லையென்ற உணர்வு பரவவேண்டும். இந்த நம்பிக்கை திடம்பெற்றால் ஜனாதிபதி கடந்த காலத்தைப் போலல்லாமல் சொன்னதைச் சொன்னதுதான் என்ற புதுமரபுக்கு அத்திபாரம் இடமுடியும்.

போர் ஒழிந்து ஏர் வழங்கும் நாளே இந்நாட்டின் பொன்னாள்.

## இப்படியும் நடந்தது!

(கொழும்பு)

பொத்துவில் பகுதியில் ஒரு கணவனும் மனைவியும் இரகசியப் பொலிசாரினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இரகசியப் பொலிசார் இவர்கள் வீட்டிற்குச் சென்று தாம் தீவிரவாதிகள் எனக் கூறி உணவுப் பார்சல் தருமாறு கேட்டனராம். இதற்கிணங்க வீட்டுக்காரர் அவர்களுக்கு உணவுப் பார்சல் வழங்கினர்.

இதன் பின்னர் இன்று மாலை இவர்கள் அந்தவீட்டுக்குத் திரும்பிச் சென்று "காலையில் தீவிரவாதிகள் என்று கூறி வந்தது நாங்கள்தான். நீங்கள் தீவிரவாதிகளுக்கு உதவிசெய்துள்ளீர்கள்" என்று கூறி இந்த இருவரையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

## வருந்துகிறோம்

மின்சாரம் இல்லாததினால் எமது பத்திரிகையின் பக்கங்கள் திடீரென குறைந்ததன் காரணமாக சில செய்திகளின் தொடர்ச்சிகள் தவறுதலாக இடம்பெற்றுள்ளனஎன்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வறுமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தும்படி உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு சகல அரசாங்க அதிபர்களுக்கும் அவர்கள் மூலம் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுக்கு செய்து கொண்ட முறைப்பாடுகளை யடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

கட்டைவேலி — நெல்லியடி
ப. நோ., கூ. சங்கம்

வாக்காளர் அட்டவணை
(30 - 09 - 85)

இணக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டவணை சங்கக் கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் 11-10-85 தொடக்கம் 21 - 10 - 85 வரையான காலத்துக்கு மேன்முறையீடு, ஆட்சேபனை என்பனவற்றுக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடு செய்ய வேண்டுபவரும், ஆட்சேபனை செய்யும் உறுப்பினரும் அவற்றினை 22 - 10 - 85 க்கு முன் கிடைக்கக்கூடியதாகச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

செயலாளர்

கரவெட்டி,
12 - 10 - 85.

1216

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி கோவில் மேற்கு வீதி, 63 ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram; Eelanadu, Telephone: 22389, — 24126.

முதலாவது பிறந்ததின வாழ்த்து

றெபின்சன் (பிரசன்னு) சந்தனதாஸ்



சுன்னாகம் சபாபதி பிள்ளை வீதியைச் சேர்ந்த சந்தனதாஸ் சாந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வன் (பிரசன்னு) றெபின்சன் தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் இன்று (12-10-85) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பாட்டா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், அத்தைமார், சித்திமார், மாமாமார், மற்றும் உற்றார், உறவினர் சகலரும் சகல பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

(1201)

வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, பிரான்ஸ், கனடா,
ஜெர்மனி செல்லவிரும்பும் பிரயாணிகள்
என்னுடன் நேரில் வந்து சந்திக்கவும்;

இன்று முதல் — செவ்வாய் வரை
(12-10-85) (15-10-85)

வ. நல்லையா

அலவத்தை, அளவெட்டி.

1218

31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



செல்வன்

வல்லிபுரம் லோகநாதன்

மலர்வு: 02-03-1963

உதிர்வு: 13-09-1985

நாட்டுக்கு பாடுபட வெளிக்கிட்டு பாதகர் கையில் சிக்குண்டாய்! உன் உயிர்க்கு ஊறுதான் நடந்ததோ நாம் அறியோம். எம்மையெல்லாம் ஆருந்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென மறைந்துவிட்ட எங்கள் அன்புத்தெய்வமே உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்; அதேதினத்தில் 13-10-85ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் மதிய போசனத்திலும் குடும்ப சமேதராய்கலந்து சிறப்பித்தேகுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்;

தெருத்தனை,
கரவெட்டி கிழக்கு;

பிரிவால் துயருறும்!
குடும்பத்தினர்கள்.

1209

மரண அறிவித்தல்

திரு. திருச்சிற்றம்பலம் ஆறுமுகசுவாமி

'இயாமாவளவு' தெல்லிப்பழையைச் சேர்ந்த திருச்சிற்றம்பலம் ஆறுமுகசுவாமி அவர்கள் காலமானார். அன்னார் நீலாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி கமலாம்பிகை ஐயாத்துரை, சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியர்), Dr. சுப்பிரமணியம் (சுதேச வைத்தியர்) ஆகியோரின் சகோதரரும், சிவசக்திதேவி, சிவசேமகாதேவி (ஆசிரியை, இலுப்பைக் கடவை) ஆகியோரின் அன்புத்தந்தையும்; சிவயோகநாதனின் (சுவிற்சலாந்து) அன்பு மாமனாரும், சிவபிருந்தாதேவி, சிவதர்ஸன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-10-85 (இன்று) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கட்டுப்பிட்டி மயானத்தில் அந்தியேட்டி தகனக் கிரியைகள் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, மக்கள்.

1217